# தன்னையே தந்த தெய்வத்திற்கு

தன்னையே தந்த தெய்வத்திற்கு
நம்மையே தருவோம் அன்புடனே

1
மலரினை நான் தந்தேன் - அவர்
மனதினைக் கேட்டு நின்றார்
உள்ளததை  நான் தந்தேன் - அவர்
உள்ளத்தைக் கேட்டுநின்றார்
எல்லாம் தந்தேன் அவர் பதமே
மெய்யாய் கண்டேன் அருள் வரமே

2
பொன் பொருள் நான் தந்தேன் - அவர்
என்னையே கேட்டு நின்றார்
என்னையே நான் தந்தேன் - அவர்
விண்ணகம் எனக்களித்தார்
எல்லாம் தந்தேன் அவர் பதமே
மெய்யாய் கண்டேன் அருள் வரமே